SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
குரோதி வருடம் கார்த்திகை 7
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 19

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

● புதுச்சேரி ● வெள்ளிக்கிழமை, நவம்பர் 22, 2024 ● வெளியூர்: 23-11-2024, சனிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 135 ● 6 பக்கம் ● ரூ.6

திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில்

ரூ.330 கோடி மதிப்பில் புதிய டைடல் பூங்கா

முதலமைச்சர் திறந்து வைத்தார்

சென்னை, நவ. 22-

தமிழ்நாட்டின் வடபகுதியில் உள்ள நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை கொண்டு செல்லும் நோக்கத்துடன் திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் 11.41 ஏக்கர் பரப்பளவில் ரூ.330 கோடி செலவில் தரை மற்றும் 21 தளங்களுடன் 5.57 லட்சம் சதுரடி பரப்பளவில் டைடல் பூங்கா கட்டப்பட்டு உள்ளது.

இதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார். இக்கட்டிடத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட தேவையான, நவீன தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள், சுகாதார வசதிகள், தீ பாதுகாப்பு மற்றும் கட்டிட மேலாண்மை வசதிகள், கண்காணிப்பு கேமரா வசதிகள், 24 மணிநேர பாதுகாப்பு வசதிகள், உணவகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் போன்ற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

6 ஆயிரம் தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள் பணிபுரியும் வகையிலும் பசுமை கட்டிடம் வழிமுறைகளின்படியும் இக்கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. பட்டாபிராமில் இப்புதிய டைடல் பூங்கா அமைக்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டின் வடபகுதியைச் சார்ந்த குறிப்பாக திருவள்ளூர் உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்களில் உள்ள படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் அந்த மாவட்டங் களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

நாளை உருவாகும் காற்றழுத்த தாழ்வுப்பகுதி தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, நவ. 22-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. கடந்த ஒரு வாரமாக டெல்டா, தென் மற்றும் உள்மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகியுள்ளது.

இதன் காரணமாக தென் கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நாளை (சனிக்கிழமை) பிற்பகலுக்குள் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது அடுத்த 2 தினங்களில் (திங்கட்கிழமை) காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப்பெற்று தெற்கு வங்கக்கடல் பகுதியை நோக்கி நகர்ந்து வரும். அதன் பின்னர் 26ந்தேதி (செவ்வாய்க்கிழமை) தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, வட இலங்கைடெல்டா மாவட்டங்களுக்கு இடையே நகரக்கூடும். அது அங்கு 24 மணி நேரம் முதல் 30 மணி நேரம் வரை அதே பகுதியில் நிலவக்கூடும். அது தொடர்ந்து தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவோ அல்லது புயலாகவோ மாறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவானிலை ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். இதனால், தமிழகத்தில் இன்று முதல் 24ம் தேதி வரை ஒருசில மாவட்டங்களில் மிதமான மழை முதல் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் 25ந்தேதி மாலையில் டெல்டா மாவட்டங்களில் மழை தொடங்கி, 26, 27 (புதன்கிழமை) மற்றும் 28 (வியாழக்கிழமை)ந் தேதிகளில் கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், ராமநாதபுரம் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் தேர்வு பணி தீவிரம்

சென்னை, நவ. 22-

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றி கழகம் 2026 சட்டமன்ற தேர்தலில் களம் இறங்குகிறது. தனித்து போட்டியா அல்லது கூட்டணி அமைத்து களம் காண்பதா என்பதை இன்னும் விஜய் அறிவிக்கவில்லை. அதேநேரம், கட்சி வளர்ச்சி பணிகளில் அவர் தீவிரம் காட்டி வருகிறார். முதல் அரசியல் மாநாட்டை மிகப் பிரமாண்டமாக நடத்தியதுடன், அதனைத் தொடர்ந்து கட்சியின் செயற்குழுவை கூட்டி ஆலோசனை நடத்தினார் விஜய்.

இந்நிலையில் த.வெ.க. மாவட்ட செயலாளர்களின் பட்டியல் ஜனவரியில் வெளியாகும் என தகவல் வெளியாகி உள்ளது.

தற்போது மாவட்ட செயலாளர்களை தேர்வு செய்யும் பணி நடைபெறுவதாகவும், மாவட்ட செயலாளர்கள் 100 பேர் மற்றும் அமைப்பாளர்கள், பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. மாவட்ட செயலாளர்களை தேர்வு செய்வது தொடர்பாக கழக நிர்வாகிகள், அணி தலைவர்களிடம் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் கருத்து கேட்டு வருகிறார்.

பிறவாமை அருளும் அகத்தியரின்
ஆத்ம காயத்ரி மந்திரம்
ஓம் அகத்து ஈசாய வித்மஹே
கால ஹஸ்தாய தீமஹி
தந்நோ சர்வப் ப்ரசோதயாத்.

பொருள்: எனது ஆன்மாவே,நீபரமாத்மாவினை சென்றடைய வேண்டிய காலம் உதித்துள்ளது நீ விழிப்படைவாயாக...

தினமும் காலையும் மாலையும் குறைந்தது 27 முதல் 108 முறை 48 நாட்கள் உரைத்தால் கீழ்கண்ட பலன்கள் கிட்டும்..
உங்கள் வேண்டுதல் நிறைவேறும்

1) நோய்கள் குணமாகும் (மௌனமாக உரைத்தால்)
2) பிறவாமை நிலை சித்திக்கும் / கர்மவினைகள் கரையும் (ஓசையுடன் உரைத்தால்)
3) கணவன் மனைவி ஒற்றுமை குடும்ப அமைதி கிடைக்கும் (குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து உரைத்தால்)
4) உங்கள் உயிருக்கு உணவாகிறது; பிரபஞ்ச ஆற்றல் ஈர்க்கப்படும்.

பிரளய அழிவுகளிலிருந்து காக்கப்படுவீர்
9789032199 7996774757
www.anbaalayam.com

துறையூரில்
முன்னாள் முதல்வர்
கலைஞர் அவர்களின்
திருவுருவச்சிலையை
திறந்துவைக்க வருகைதரும்
எங்களின் எதிர்காலமே
மாண்புமிகு. துணை முதலமைச்சர்
இளைய முதல்வர் அவர்களை
வருக! வருக!! என வரவேற்கும்...
M.பழனியாண்டி எம்.எல்.ஏ.,
ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர்,
தலைமை செயற்குழு உறுப்பினர்

அனைத்து துறைகளிலும் பெண்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்–புதுச்சேரி கவர்னர் பேச்சு

KARAIKAL AMMAIYAR
NIT CAMPUS, KARAIKAL

காரைக்கால், நவ. 22–

காரைக்காலில் நேற்று நடைபெற்ற மகளிர் மாநாட்டில், புதுச்சேரி கவர்னர் பேசியதாவது, சட்டப்பேரவை தலைவர், அமைச்சர் பெருமக்கள், காரைக்கால் மாவட்ட ஆட்சியர், மற்றும் இந்த மாநாட்டில் பங்கேற்று இருக்கும் பெண்கள் “நாரி சக்தி“ அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவனுக்கு தொண்டு செய்ததால், இறைவனே “அம்மையே“ என்று அழைத்த காரைக்கால் அம்மையார் பிறந்து வாழ்ந்த மண்ணில் இந்த “காரைக்கால் மகளிர் மாநாடு“ நடப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. மகாகவி பாரதியார் நினைத்ததைப் போல, தொழில், அறிவியல், மருத்துவம், சட்டம், காவல், விளையாட்டு, அரசியல் என்று எல்லா துறைகளிலும் இன்று பெண்கள் சாதனை படைத்து வருவதை நாம் பார்க்கிறோம். மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்கி அதன் மூலமாக கைத்தொழில் செய்து பொருளாதார பலம் பெற்று இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், பெண்கள், தொழில் அதிபர்களாக உயர்ந்து பலருக்கு வேலை கொடுத்து அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதையும் பார்க்க முடிகிறது.

சுய உதவிக் குழுக்கள் தொடங்கி ஊரக வளர்ச்சிக்குப் பாடுபட்டு, காலம் சென்ற பாரதப் பிரதமர் வாஜ்பாயால் “ஸ்ரீ சக்தி“ விருது பெற்ற சின்னப்பிள்ளை போன்ற பலரை இதற்கு உதாரணமாக சொல்லலாம். விருது வழங்கிய பாரதப் பிரதமர் தன்னைவிட வயதில் குறைந்த சின்னப்பிள்ளையின் காலில் விழுந்து ஆசி பெற்றதை கண்டு இந்த நாடே வியந்தது.

ஆண்களுக்கு இருக்கும் எல்லா திறமைகளும் பெண்களுக்கும் உண்டு என்பதற்கு ஏற்ப இந்திய பாதுகாப்புத் துறையிலும் காவல் துறையிலும் பெண்கள் பல உயர் பதவிகளில் இருந்து சாதனை செய்து வருகிறார்கள்.

புதுமைப் பெண்களாக, புரட்சி பெண்களாக, துப்பாக்கி ஏந்தும் வீராங்கனைகளாக, அறிவூட்டும் ஆசிரியராக, குடும்ப தலைவிகளாக, விண்வெளி ஆராய்ச்சியாளராக தகவல் தொடர்பு வல்லுனராக அனைத்து துறைகளிலும் பெண்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

கடந்த 2023 ஆகஸ்டு 26 ஆம் தேதி “சந்திராயன் 3, VIKRAM LANDER தரை இறங்கும் தளத்திற்கு “சிவசக்தி“ என்ற பெயரை பாரத பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். சர்வதேச வானியல் ஒன்றியம் International Astronomical Union இந்த பெயரை அங்கீகரித்தது.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பெண்களை மதித்து எப்போதும் அவர்களை பெருமைபடுத்தி வருகிறது. இன்று நமது இந்தியத் திருநாட்டின் குடியரசு தலைவராக பதவி வகித்து கொண்டிருப்பவரும் ஒரு பெண் தான் என்பதை நினைத்து நாம் பெருமைப்படுகிறோம்.

பொருளாதாரத்தில் நாம் பிறரை சார்ந்து இருக்கக் கூடாது என்ற மனநிலை பெண்கள் மத்தியில் தற்போது அதிகமாக மேலோங்கி வருகிறது. சிறு நகரங்களில் கூட, கல்லூரிகளில் படிக்கும் பெண்கள் பகுதி நேர வேலைக்கு செல்வது அதிகரித்து இருக்கிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு, தொழில் நிறுவனங்கள் நடத்தி வரும் பெண்களுடன் மாண்புமிகு குடியரசு தலைவர் திரௌபதி முர்மு கலந்துரையாடிய போது, ”நாட்டில் உள்ள பெரும்பாலான பெண்கள் பொருளாதார ரீதியாக யாரையும் சார்ந்து இல்லாமல் சுதந்திரமாக இருக்க விரும்புகின்றனர். அந்த இலக்கை அடையும் வழிமுறைகள் தெரியாத பெண்களுக்கு நாம் வழி காட்ட வேண்டும்”

என்றும் கூறியிருந்ததை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். சமீப காலமாக அரசு பணி தேர்வில் தேர்ச்சி பெறும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நமது காரைக்கால் பகுதியை சேர்ந்த பெண் சரண்யா, IAS தேர்வில் வெற்றி பெற்று குடிமைப் பணியில் இருக்கின்றார். அவரும் இன்று நம்முடன் இந்த மேடையில் அமர்ந்திருக்கிறார்.

காரைக்காலில் இருக்கின்ற மகளிர் கல்லூரியில் படிக்கின்ற பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. உயர் கல்வியில் பெண்கள் தன் நிறைவு பெற வேண்டும் என்ற நமது தலைவர்களின் எண்ணம் நிறைவேறும் அறிகுறிகள் தான் இவையெல்லாம்.

இதைப்போன்ற பெண்களுக்கு அதிக அளவில் வாய்ப்பு கொடுத்து அதிகாரம் அளிக்கும் புதிய சகாப்தத்தை உருவாக்க தற்போதைய மத்திய அரசு நாடாளுமன்றத்தில் “NARI SHAKTI VANDAN ADHINIYAM“ என்று சொல்லப்படும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றியது. இது வெறும் சட்டம் அல்ல. நம்முடைய தேசத்தை உருவாக்கிய எண்ணற்ற பெண்களுக்கு நாம் செலுத்தும் மரியாதை. இந்த வரலாற்று நடவடிக்கை பெண்களின் உரிமைக் குரல் ஓங்கி ஒலிக்க வழி வகுக்கும்.

பெண்களுக்கான இந்த இட ஒதுக்கீடு 15 ஆண்டுகளுக்கு தொடரும். இட ஒதுக்கீட்டில் SC, ST பிரிவினருக்கு ஒதுக்கீடு இருக்கும் என்று இந்த மசோதா சொல்கிறது. இந்த மசோதா அமலுக்கு வந்த உடன் மக்களவையில் தற்போது 82 ஆக இருக்கும் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை 181 ஆக உயரம். என்றார். விழாவில் சபாநாயகர் செல்வம் அமைச்சர்கள் திருமுருகன் சாய் சரவணன் தேனி ஜெயக்குமார் கலெக்டர் மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்

22.11.2024 (வெள்ளிக்கிழமை)

மாறிவிட்டது

வீடு, அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வணிக கட்டிடங்கள் என எந்த கட்டிடமும் கட்டிட வரைபட அனுமதியை பெற்ற பிறகுதான் கட்டமுடியும். இதில் 10 ஆயிரம் சதுர அடிக்கு உட்பட்ட குடியிருப்புகளுக்கும், 2 ஆயிரம் சதுர அடிக்கு உட்பட்ட வணிக கட்டிடங்களுக்கும் எந்த இடத்தில் அந்த கட்டிடம் அமைகிறதோ அந்த பகுதியில் இருக்கும் உள்ளாட்சி அமைப்புகளிடமே வரைபட அனுமதியை பெற்றுவிட முடியும். அதாவது கிராம பஞ்சாயத்து, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளே இதற்கான அனுமதியை வழங்கிவிடும்.

இதற்கு மேற்பட்ட அளவுகளுக்கு சென்னை பெருநகரத்துக்கு உட்பட்ட பகுதியாக இருந்தால் சி.எம்.டி.ஏ. என்று கூறப்படும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமும், சென்னையை தவிர மற்ற 37 மாவட்டங்களுக்கும் நகர் ஊரமைப்பு துறையிடமும் அனுமதி பெறவேண்டும். இந்த கட்டிட வரைபட அனுமதி பெறுவதற்கு அந்தந்த கட்டிட பயன்பாட்டுக்கு ஏற்ப சில விதி முறைகள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட வளர்ச்சி விதிகளில் மிக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில்தான் எந்த மனைப்பிரிவு என்றாலும் சரி, கட்டிடங்களை கட்ட தொடங்குவதற்கு முன்பு உள்ளாட்சி அமைப்புகளிடமோ சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமோ, நகர் ஊரமைப்புத் துறையிடமோ வரைபட அனுமதியை பெற்றாக வண்டும். கட்டிடம் கட்டுவதற்கு முன்பு இதுதான் முதல் படி. இதுவரை கட்டிட வரைபட அனுமதியை பெறுவது என்பது மிகவும் சிக்கலாக இருந்தது. அதாவது அலுவலக நடைமுறைகளை முடித்து அனுமதி பெறுவதற்கு மிகவும் தாமதம் ஏற்பட்டது.

இந்த தாமதத்தை களைய தமிழக அரசு 3,500 சதுர அடிக்கு உட்பட்ட வீடுகளுக்கு ஆன்லைன் முறையில் சுய சான்றிதழ் திட்டத்தின் கீழ் அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றம் செய்தால் ஒரே நொடியில் வரைபட அனுமதியை வீட்டில் இருந்தே பெற்றுக்கொள்ளமுடியும் என்ற மக்களுக்கு மிகவும் பயனளிக்கும் திட்டத்தை கடந்த ஜூலை 22ந்தேதி கொண்டுவந்தது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்த திட்டத்தை தொடங்கி வைத்தார். இதுவரை இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 23 ஆயிரத்து 97 வீடுகளுக்கு ஒரே நொடியில் வரைபட அனுமதி கிடைத்துள்ளது. இதற்கு முன்பு இந்த அனுமதியைப் பெற மாதக்கணக்கில் ஆனது.

அதேபோல 3 ஆயிரத்து 500 சதுர அடி முதல் 10 ஆயிரம் சதுர அடி வரையிலான கட்டிடங்களுக்கும் 30 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகள் அனுமதியை வழங்கவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கு மேல் அதாவது 10 ஆயிரம் சதுர அடிக்கு மேற்பட்ட கட்டிடங்கள் என்றால் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும், நகர் ஊரமைப்புத்துறையும் 30 நாட்கள் காலக்கெடுவுக்குள் அனுமதி வழங்கி வருகிறது. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த ஒற்றை சாளர முறையில் சென்னையை தவிர தமிழ்நாடு முழுவதும் 4 ஆயிரத்து 734 கட்டிடங்களுக்கு வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று நகர் ஊரமைப்புத்துறை இயக்குனர் பா.கணேசன் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார். வரைபட அனுமதியை பெற கால் கடுக்க அலுவலகங்களுக்கு நடந்து சென்று மாத கணக்கில் காத்திருந்த நிலை இப்போது மாறிவிட்டது.

ஹெரிடேஜ் ரவுண்ட் டேபிள் சார்பில் சாதனை போலீசாருக்கு கவர்னர் பாராட்டு

புதுச்சேரி, நவ. 22–

புதுச்சேரியில் சாதனை புரிந்த போலீசாருக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை கவர்னர் கைலாஷ்நாதன் வழங்கினார்.

புதுச்சேரி ஹெரிடேஜ் ரவுண்ட் டேபிள் சார்பில், காக்கி உடை வீரர்கள் விழா, முதலியார்பேட்டை பகுதியில் நடந்தது. விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதனை தொடர்ந்து சிறப்பாக பணியாற்றி பல்வேறு சாதனைகளை புரிந்த போலீசாருக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

விழாவில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், சம்பத் எம்.எல்.ஏ., டி.ஜி.பி., ஷாலினி சிங், ஐ.ஜி., அஜித்குமார் சிங்ளா, டி.ஐ.ஜி.,கள் சத்திய சுந்தரம், பிரிஜேந்திரகுமார் மற்றும் போலீஸ் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

அறங்காவலர் குழு தலைவர் நியமனம்

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் வட்டம் ஆண்டிபட்டி கிராமம் கரும்பனூர் ஆனைமேல் அய்யனார் கோவில் அறங்காவலர் குழு தலைவராக தென்காசி தெற்கு மாவட்ட மதிமுக செயலாளர் இராம. உதயசூரியன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், எட்டிமடை பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சி நடைபெறுவதை ஏராளமான மக்கள் பார்வையிட்டனர்.

20 ஆண்டாக ஆக்கிரமிப்பில் இருந்த ரூ.50 கோடி மதிப்புள்ள கோவில் நிலம் மீட்பு: இந்து சமய அறநிலையத்துறை அதிரடி நடவடிக்கை

புதுச்சேரி, நவ. 22–

முதலியார் பேட்டை பகுதியில் ஆக்கிரமிப்பிலிருந்த ரூ.50 கோடி மதிப்புள்ள கோவில் நிலம், ஐகோர்ட் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத் துறையினர் நேற்று அதிரடியாக மீட்டனர்.

வீராம்பட்டினம் செங்கழுநீர் அம்மன் கோவிலுக்கு சொந்தமான ரூ. 50 கோடி மதிப்புடைய 11.5 ஏக்கர் நிலம், முதலியார் பேட்டை அடுத்த வேல்ராம்பட்டு ஏரிக்கரை அருகே உள்ளது. அந்த நிலத்தை குத்தகை எடுத்து கடந்த 20 ஆண்டுகளாக விவசாயம் செய்து வந்த முதலியார் பேட்டையை சேர்ந்த ராமசாமி என்பவர், நிலத்தில் கொட்டகை அமைத்து நிலம் தனக்கு சொந்தம் என சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இவ்வழக்கில் இந்து அறநிலையத்துறை வாதங்களை ஏற்ற கோர்ட், ராமசாமி மனுவை தள்ளுபடி செய்தது. அதனைத் தொடர்ந்து, இந்து அறநிலையத்துறை சார்பில், ராமசாமிக்கு பல முறை நோட்டீஸ் அனுப்பியும், நிலத்தை ஒப்படைக்காமல் காலம் கடத்தினார்.

அதனைத் தொடர்ந்து பாஸ்கர் எம்.எல்.ஏ., முன்னிலையில், தாசில்தார் பிரித்திவிராஜ், கோவில் தனி அதிகாரி சுரேஷ் மற்றும் அதிகாரிகள் குழுவினர் இன்ஸ்பெக்டர் கண்ணன் தலைமையிலான போலீஸ் பாதுகாப்புடன் சென்று ராமசாமி ஆக்கிரமித்து வைத்திருந்த நிலத்தை மீட்டு இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமான இடம் என அறிவிப்பு பலகை அமைத்தனர். அங்கு ராமசாமி கட்டியிருந்த கொட்டகைக்கு சீல் வைத்தனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

மாலை
எக்ஸ்பிரஸ்
E-mail:maalaiexpresspdy@gmail.com
• வெள்ளி • நவம்பர் 22, 2024

சிறப்பு புகைப்பட கண்காட்சியை துவக்கி வைத்த நீதிபதி

தேனி, நவ. 22-

தேனி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் புதிய வடிவிலான சட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட முதன்மை நீதிபதி சொர்ணம் நடராஜன் துவக்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

சட்டம் சம்பந்தமான சந்தேகங்களுக்கும். அதனை தீர்ப்பதற்கும் மாநிலம் முழுவதும் இலவச சட்ட உதவி மையம் செயல்பட்டு வருகிறது. சட்டம் பற்றிய விழிப்புணர்வை அனைத்து தரப்பு மக்களுக்கு தெரியப்படுத்தவும், அனைவருக்கும் நீதியை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு விழிப்புணர்வு பணிகள் சட்டப்பணிகள் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இவ்விழிப்புணர்வு முகாம் மற்றும் சிறப்பு புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட முதன்மை நீதிபதி தெரிவித்ததாவது, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு பல ஆண்டுகளாக சட்டம் சார்ந்த பல்வேறு சேவைகளை செய்து வருகிறது. இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இம்முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் சட்டம் சார்ந்த புரிதல்களை ஏற்படுத்த அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்து, நீதிமன்ற செயல்பாடுகள் குறித்து எடுத்துரைக்க வேண்டும். நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரணை தவிர. சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் குறித்து விளக்கம் அளிக்கும் வகையில் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சேவைகள் பற்றி தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் மேலும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு துறைகளின் புகைப்பட கண்காட்சி அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளனர்.

இதனை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட முதன்மை நீதிபதி தெரிவித்தார்.

சாலையை சீரமைக்கக்கோரி ஆட்சியரிடம் மனு

தூத்துக்குடி, நவ. 22-

கோவில்பட்டியில் அரசு அலுவலக வளாகங்கள் அமைந்துள்ளன. இந்த பகுதியில் சார்பு நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றங்கள், விரைவு நீதிமன்றம், பி.எஸ்.என்.எல். அலுவலகம் மற்றும் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம், கிளை சிறை, டி.எஸ்.பி அலுவலகம், புள்ளியல் துறை அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்கள் பத்துக்கும் மேற்பட்ட அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த விடுமுறை நாட்களை தவிர்த்து வேலை நாட்களில் அரசு அலுவலக வளாக சாலையில் சுமார் 4000 பேர் வரை வந்து செல்லும் இந்த சாலை மிகவும் மோசமான குண்டும் குழியுமாக நிலையில் காணப்படுகிறது. இந்த சாலையை சீரமைக்க வலியுறுத்தி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் இருபதுக்கு மேற்பட்ட மனுக்கள் கொடுத்துள்ளனர். இதனை தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக ஜமாபந்தியில் மனு அளித்துள்ளேன். எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் இது தொடர்பாக மனுக்களும், பல்வேறு கட்ட போராட்டங்களும் நடத்தினோம், தற்போது மழைக்காலம் என்பதால் சாலை மிகவும் சேரும் சகதியுமாக உள்ளது. எனவே கணம் மாவட்ட ஆட்சியர் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்தனர். அவருடன்

தூத்துக்குடி வடக்கு மாவட்ட துணைத் தலைவர் முத்துசாமி, மாவட்ட இளைஞரணி தலைவர் எஸ்.ஏ.கனி, மாவட்ட பொருளாளர் செண்பகராஜ், மாவட்ட பொதுச்செயலாளர் சுப்புராஜ், அய்யாத்துரை, நகரத் துணைத் தலைவர் சரவணன், நிர்வாகிகள் தங்கராஜ், தங்கபாண்டியன், பழக்கடை அருள், ரமேஷ், சிங்கராஜ், இளைஞர் அணி நிர்வாகிகள் பாண்டியராஜன், செந்தூரக்கனி,சக்திவேலு, வட்டார நிர்வாகிகள் மாரிமுத்து, கேசவன் உள்பட கட்சி நிர்வாகிகளுடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத்திடம் உங்களுடன் ஒரு நாள் முகாமில் மனுக்களை கொடுத்தனர்.

உளுந்தூர்பேட்டையில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

உளுந்தூர்பேட்டை, நவ. 22-

கள்ளக்குறிச்சி மாவட் டம் உளுந்தூர்பேட்டை அரசு பெண்கள் மாதிரி மேல்நிலைப் பள்ளி நுழைவு வாயில் முன்பு தமிழ்நாடு மேல்நிலை முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் கள்ளக்குறிச்சி மாவட்ட தலைவி மாலதி தலைமையில் தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினம் அரசு பள்ளியில் ஆசிரியர் ரமணியை படுகொலை செய்தது கண்டித்து ஆசிரியர்கள் கருப்பு பேட்ச் அணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 50க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

பள்ளி மாணவர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கல்

புதுக்கோட்டை, நவ. 22-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி இந்தியன் ரெட் கிராஸ் கிளை மற்றும் அரசு மருத்துவமனை சித்த மருத்துவ பிரிவு சார்பாக ஆலங்குடி அபிராமி மெட்ரிகுலேஷன் பள்ளியில் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது. ஆலங்குடி பகுதியில் சில தினங்களாக தொடர் மழை பெய்து வருவதால் காய்ச்சல், மற்றும் டெங்கு காய்ச்சல் பரவி வருகிறது. அதனை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அபிராமி மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவர்களுக்கு இந்தியன் ரெட் கிராஸ் சேர்மன் மருத்துவர் முத்தையா தலைமையில் ஆலங்குடி அரசு சித்த மருத்துவர் மணிவண்ணன், பள்ளி தாளாளர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில் ரெட் கிராஸ் பொருளாளர் ஜெயச்சந்திரன், துணை செயலாளர் லெட்சுமி நாராயணன், துணை தலைவர் முருகேசன், செயற்குழு உறுப்பினர்கள் சிவ ஆனந்தன், திருமூர்த்தி, சமூக ஆர்வலர் செந்தில் ராஜா ஆகியோர் கலந்து கொண்டு பள்ளி மாணவர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது.

புதுச்சேரியில் 'ஞான கும்பமேளா' தேசிய கல்வி மாநாடு

சபாநாயகர் செல்வம் பங்கேற்பு

புதுச்சேரி, நவ. 22-

புதுச்சேரியில் தேசிய கல்வி மாநாடு துவங்குவதையொட்டி மாணவர் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. புதுச்சேரி பல்கலைக்கழகம், அகில இந்திய தொழில்நுட்ப கல்வி குழுமம் ஆகியன சார்பில், தேசிய கல்வி மாநாடு 'ஞானகும்பமேளா' என்ற தலைப்பில் 21, 22, 23 ஆகிய மூன்று நாட்களில் புதுச்சேரி பல்கலைக் கழக மரபு மற்றும் பண்பாட்டு கலையரங்கில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையொட்டி, சின்னக்காலாப்பட்டு ஓட்டல் அசோக் எதிரில் மாணவர் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. சிறப்பு விருந்தினராக கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., கல்வி மேம்பாட்டு கேந்திர அமைப்பின் தேசிய செயலாளர் அதுல் கோத்தாரி ஊர்வலத்தை துவக்கி வைத்தனர். மங்கள வாத்தியங்கள் முழங்க சின்னக்காலாப்பட்டு, இ.சி.ஆர்., வழியாக சென்ற ஊர்வலம் பிள்ளைச்சாவடி, புதுச்சேரி பல்கலைக்கழக மரபு மற்றும் பண்பாட்டு கலையரங்கம் எதிரே நிறைவடைந்தது.

புதுடெல்லியில் அடுத்த ஆண்டு பிப். 5 முதல் 9ம் தேதி வரை நடக்க உள்ள உலக ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாடான வேவ்ஸ் மாநாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாநாட்டில் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் பாரதிய அறிவு முறை கண்காட்சியினை சபாநாயகர் செல்வம் திறந்து வைத்து பார்வையிட்டார். தென்னிந்திய அளவில் கல்வி நிறுவனங்கள் பங்கேற்றுள்ள இந்த கண்காட்சியில் இடம்பெற்ற கைத்தறி உள்ளிட்ட கலை படைப்புகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது. தமிழ்நாடு விவேகானந்தா கல்லூரி முன்னாள் முதல்வர் வன்னியராஜன், கொச்சின் அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் நந்தகுமார் மற்றும் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் பங்கேற்றனர். இன்று 22ம் தேதி நடக்கும் மாநாட்டின் துவக்க விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன், முதல மைச்சர் ரங்கசாமி, கல்வி அமைச்சர் நமச் சிவாயம், புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் தரணிக்கரசு பங்கேற்கின்றனர்.

How workmen interim coaches may help Satwiksairaj Rankireddy-Chirag Shetty rebuild their aura

New Delhi, Nov.22-

It is never preposterous to pencil in Satwiksairaj Rankireddy and Chirag Shetty for a tournament final. Those are both the expectations demanded of them, and the standards they have set. But the Olympics setback has meant that they resume the long way back to redemption, from scratch – rebuilding their aura, reaffirming to themselves that they can fight back from the shocking quarters exit at the Paris Games and look to LA, though it is far away still.

On Thursday, the Indian duo, seeded a distant sixth, bluntly shot down Danish Rasmus Kjaer and Frederik Sogaard 21-19, 21-15. The tall Danes were like stalking shadows through the first set, snapping at Indian heels. But the Indians had both the class and calm to pin them in the second – refreshingly so, despite being drawn into a parallel game.

It really started to come undone, much before Paris, and not solely due to injuries, right there at the same place, the Shenzen Super 750 last year. Satwik-Chirag lost their first tournament final in 4 years there, at the China Masters at the fag end of the 2023 season. That loss to Chinese eventual Paris silver medallists Liang-Wang, didn't so much dent their confidence, as scratch a wound that just didn't mend itself, with opponents picking at the tiniest of lingering defects in their games. Two other finals defeats followed in shocking succession, and Paris ended up a tough spirit-numbing campaign.

Coach Mathias Boe has left. And on a strictly interim basis, India's most consistent and highest achieving shuttlers of the last 5 years, find themselves in the care of Manu Attri and Sumeeth Reddy on the coaching bench. So, what can Satwik-Chirag learn from India's 2016 men's doubles Olympians, reunited, only because Sikki Reddy, Sumeeth's partner in mixed doubles at the ongoing China Masters, was struck by illness? The bread & butter game of the ordinary folk, who cannot rain down attacks from a vantage.

So eternally comfortable with their towering attack, it is the low altitude fast, parallel game that Liang-Wang, Aaron-Soh and the Koreans prefer, that has proven to be the Indians' undoing in the last 12 months. When rallies extend, and there's no quick conclusions available through piercing smashes which all get retrieved, the Indians have had to accept dictated terms by opponents. They are no mugs at low defense, but in crucial moments ever since the 2023 World Championships when Kim Astrup and Anders Skaarup Rasmussen got them acquainted with losing, dragging them into complicated left-right patterns, Satwik-Chirag had stumbled, unable to switch organically to the parallel style.

Truth be told, it's a cumbersome, attritional style, and sucks the booming power and creative menace out of you. But the Indonesians have exploited it at the All Englands and right till the Olympics, the workman's doubles pairing has cramped both talented Indians. What Manu Attri and Sumeeth, temporarily, would do, is view the game on their behalf like the non-altitude players do.

Reading those serves full of mischief, expanding the variety in shots to simply start finding creativity even in the speed-centric, mundane, parallel game, and bearing out the long passages, where the faux-lifts cannot be smothered with a smash, because they are sent sailing that way – it's in these laborious tasks that Manu-Sumeeth, who never reached dizzy heights themselves, but read opponents accurately, can help them.

Satwik-Chirag have enough chutzpah to back themselves when cornered, and all the shots to turn the tide. But they can do with the help of Indian coaches, briefly till the foreigners arrive, by mastering the rhythm of the ordinary, parallel game. Mind you, it is ordinary only in bombastic power, not in guile or pace – where the layering happens. But it's something the streetsmart Meerut shuttler Manu can help them demystify.

If you were to truly pinpoint the moment when doubts first crept up glaringly ahead of Paris – it was the World Championship in 2023. Satwik-Chirag have since beaten Astrup and Rasmussen, whom they play in the China Masters quarters on Friday. The Danes have tripped up Indians 6-3 in head-to-head – the pattern goes two wins for Danes, one for Indians, thrice over. And it's got to do a little with how Indians, now ranked 9, can set traps on the back court for the third ranked Danes, after getting past their deceptive serves.

All the world is a score-settling stage for Satwik-Chirag at this point. It's where a bit of eye-level fast exchange badminton, the sorts Manu copped to survive everyday and what coaches at Hyderabad humbly prepare wards for, can help. A solid, evenly shaped, blunt butter-knife, more than a killer's blade is what's needed.

திண்டிவனத்திற்கு வருகை தரும்

முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு செஞ்சி ஒன்றிய குழு கூட்டத்தில் தீர்மானம்

செஞ்சி, நவ. 22-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய குழுவின் சாதாரண கூட்டம் ஊராட்சி ஒன்றிய மன்ற அரங்கத்தில் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நவம்பர் 28, 29 ஆகிய இரு நாட்களில் அரசு நிகழ்ச்சிகள், மற்றும் கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்க விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திண்டிவனத்தில் செஞ்சி ஒன்றிய குழு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும், செஞ்சி ஒன்றியம் சிங்கவரம், பொன்பத்தி, ரெட்டிபாளையம், மேல் பாப்பம்பாடி, கெங்கவரம், ஆகிய ஊராட்சிகளில் ரூபாய் 22 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைத்தல், ஆழ்துளை கிணறு அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பழுது நீக்கம் செய்தல், பழைய ஆழ்துளை கிணறுகளை ஆழப்படுத்தி புதிய மின் மோட்டார்கள் அமைத்தல், உலர் களம் அமைத்தல், கட்டிடங்கள் பழுது நீக்கம் செய்தல், உள்ளிட்ட பணிகள மேற்கொள்வதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சி வட்டார வளர்ச்சி அலுவலர் சீத்தாலட்சுமி, ஒன்றிய கவுன்சிலர்கள், அலுவலக பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மரக்கன்று நடும் விழா

மதுரை, நவ. 22-

மதுரை சோழவந்தான், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ரூபாய் 14.60 லட்சம் செலவில் மதுரை ஸ்டார் ரோட்டரி சங்கத்தால் பள்ளி மாணவிகளுக்கு கட்டி முடித்த கழிவறை கட்டிடத்தை பயன்பாட்டிற்கு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. அதனை தொடர்ந்து பள்ளி வளாகம் முழுவதும் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டது.

ரோட்டரி 3000ன் முன்னாள் ஆளுநர் ஆனந்த ஜோதி மற்றும் தற்போதைய ஆளுநர் ராஜா கோவிந்தசாமி இந்த புதிய கழிவறை கட்டிடத்தை திறந்து வைத்தவர்கள். மதுரை ஸ்டார் ரோட்டரி சங்கத்தின் நிர்வாகிகள் வாசுதேவன், பாலசுப்ரமணியன், கன்னியப்பன், ஆடிட்டர் சேதுமாதவா ஆகியோர் கலந்துகொண்டனர்.

குண்டும் குழியுமாக இருந்த சாலைகளை சீரமைத்த போக்குவரத்து காவலர்கள்

மதுரை, நவ. 22-

மதுரை காளவாசல் போக்குவரத்து சிக்னல் பகுதியில் குண்டும் குழியுமாக இருந்த சாலைகளை சீரமைத்த போக்குவரத்து காவலர்கள்.

மதுரை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையால் மழையால் மதுரை மாநகரின் பிரதான சாலைகள் சேதமடைந்துள்ளன. குறிப்பாக காளவாசல் போக்குவரத்து சிக்னல் பகுதியில் உள்ள சாலைகள் சேதம் அடைந்து குண்டும், குழியுமாக காணப்பட்டது. இதனால் வாகன ஓட்டிகள் அந்த குழியில் தட்டு தடுமாறி கீழே விழுந்து காயம் அடைந்தனர். மேலும் மதுரையின் போக்குவரத்து மிகுந்த பகுதியாக காளவாசல் இருப்பதால் பொது மக்கள் நலன் கருதி இந்த சாலையை சீரமைக்க போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி அவர்களின் உத்தரவின் பேரில் போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் சந்தனகுமார் தலைமையிலான போக்குவரத்து சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சர்க்கரை மற்றும் பாஸ்கரன் ஆகியோர் குண்டும், குழியுமான காணப்பட்ட சாலையை சீரமைத்தனர். இதனால் வாகன ஓட்டிகள் நிம்மதி அடைந்தனர். போக்குவரத்து போலீசாரின் இந்த ஆர்வமிக்க மக்கள் நலன் கருதிய இந்த செயலை பொதுமக்கள் பாராட்டினர்.

திருச்சியில் கலைஞர் நூற்றாண்டு விழா

திருச்சி, நவ. 22-

திமுக கலை இலக்கிய பகுத்தறிவு பாசறை சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா நடைபெற்றது. இதில் இந்திய சோசியலிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டாக்டர் தமிமுல் அன்சாரி நிஜாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

“அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்“ என்கிறார் இளங்கோ அடிகள். அரசியல் பற்றி கூறவந்த வள்ளுவர், அதனை “இறைமாட்சி” என்று குறிப்பிடுகிறார். அதாவது இறைவனின் தொழில் அது என்கிறார்.

அப்படிப்பட்ட ஒரு பொறுப்பினை யாருக்கு வழங்கி நம்மை ஆள வைக்கப் போகிறோம் என்பதை ஆழமாய் சிந்தியுங்கள். இதில் நட்பு, உறவு, அறிந்தவன், தெரிந்தவன் என்று முகம் பார்த்து குப்பைகளை குன்றில் வைத்து மேலும் குப்பைகளைக் குவிக்காதீர்கள். இருக்கின்ற குப்பைகளையே அள்ளி அகற்றுவதற்கு ஆள் இல்லை. திமுகவின் மீது அவதூறுகளை இட்டுக்கட்டி திரைக்கதை எழுதும் புதிய தமிழ் தேசிய நடிகர்களையும், புதிய படப்பிடிப்பு நடத்த ஷூட்டிங் எண்ணத்தோடு கட்சிக் கடை துவங்கியுள்ள பேராசைபேர்வழிகளையும், ஒடிசாவில் தமிழர்களை அவமானப்படுத்தி பேசி விட்டு இங்கு நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டு செவாலியே சிவாஜி அவர்களையே தூக்கி சாப்பிடும் வண்ணம் உணர்ச்சிகரமாக உசுப்பேற்றி அரசியல் செய்யும் காமெடி நடிகர்களையும், சிறுபான்மை வாக்குகளை சிதறடிக்கும் சிறுபான்மை காவலர் போலி வேடதாரிகளையும் முச்சந்தியின் முனையிலேயே நிறுத்தி விட்டு திமுக தலைமையிலான மதச்சார்பற்ற சக்திகள் வெல்வதற்கு மும்முரமாக உழைப்பது நமது தலையாய கடமை என்பதை உணர்வோம்.

சுயமரியாதை சமத்துவம் சமூகநீதி மதச்சார்பின்மை மொழி உரிமை கொள்கைகளை சட்டமாக்கி தந்தை பெரியார் பேரறிஞர், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கனவுகளை நனவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞரின் வாரிசாக, விடியலின் வேந்தராக நல்லாட்சி நடத்தி வரும் முதல்வர் நல்லிணக்க ஆட்சி தொடர சூளுரை ஏற்போம். இது எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான பரப்புரையின் துவக்கமாகக் கூட எடுத்து கொள்ளலாம்.

தமிழகத்தின் பன்முகம் காக்க இன்முகம் கொடுப்போம். பெரியாரிய மண்ணின் பெருமைகளை காப்போம் என்று பேசினார்.

இந்திரா காந்தி பிறந்தநாள் விழா

கும்பகோணம், நவ. 22-

முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு கும்பகோணம் அருகில் சோழன் மாளிகையில் அவரது சிலைக்கு தஞ்சை வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டி ஆர் லோகநாதன் லைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் வட்டார தலைவர்கள் மணிகண்டன், சிவஞானம், அசோக், மணிசங்கர், மாநில பொதுக்குழு உறுப்பினர் மாநகர பொருளாளரும் தியாகராஜன், கும்பகோணம் சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் தலைவர் சேகர், மாவட்ட செய்தி தொடர்பாளர் தண்டாளம் சரவணன், வட்டார தலைவர் தமிழ்செல்வன், மாவட்ட மனித உரிமை துறை தலைவர் விஜயகுமார், மாநில மனித உரிமை துறை செயலாளர் குட்டி சாமிநாதன், வட்டார துனை தலைவர்கள் ஹாஹா மதன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

கும்பகோணத்தில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

கண்டன ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், நவ. 22-

கும்பகோணம் காந்தி பூங்கா முன் அனைத்து ஆசிரியர் சங்கங்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் இருதயராஜா தலைமை வகித்தார். ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்க மாநில தலைமை நிலையச் செயலர் அறிவுடைநம்பி முன்னிலை வகித்தார்.

அனைத்து ஜாக்டோ ஜியோ சங்க மாநில துணைத் தலைவர் ராஜா பணிப் பாதுகாப்பு சட்டம் கொண்டு வர வலியுறுத்தினார். ஆசிரியர் சங்க நிர்வாகிகள் கண்ணதாசன், செல்லத்துரை, ஏகநாதன், முருகன், சாந்தி, மாநிலக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் திரளான ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

எக்விடாஸ் பள்ளி மாணவர்கள் தேக்வான்டோ போட்டியில் சாதனை

சுவாமிமலை, நவ. 22-

கும்பகோணம் எக்விடாஸ் குருகுல் மேல்நிலைப் பள்ளியை சேர்ந்த மாணவர்கள் தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை ஏற்பாடு செய்த மாவட்ட அளவில் நடைபெற்ற தேக்வான்டோ போட்டியில் கிருத்திக் கௌரவ் தங்கப்பதக்கமும், மார்க் விவின் வெள்ளி பதக்கமும், அப்துல் அஸீஸ், ராம்சரண் ஆகியோர் வெண்கல பதக்கமும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர். மேலும் தங்கம் வென்ற கிருத்திக் கௌரவ் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறும் தமிழ்நாடு அளவிலான போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பள்ளி முதல்வர் ரோகினி முத்துச்சாமி மற்றும் ஆசிரியர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

தே.மு.தி.க., தொழிற்சங்க நிர்வாகிகள் நியமனம்

மனோ

விழுப்புரம், நவ. 22-

தே.மு.தி.க., தொழிற்சங்க நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் மாவட்ட செயலாளர் வெங்கடேசன் பரிந்துரையின்பேரில், கட்சி பொதுச்செயலாளர் பிரேமலதா, சார்பு அணி நிர்வாகிகளை நியமித்துள்ளார். அதன்படி, விழுப்புர மாவட்ட தே.மு. தி.க., தொழிற் சங்க செயலாளராக வழக்கறிஞர் மனோ, தலைவராக சஞ்சீவி வெங்கடேசன், பொருளாளராக சுரேஷ்குமார், துணைத் தலைவர் களாக வஹாப், சந்திரசேகர், சாகுல் ஹமீது, துணை செயலாளர்களாக வடிவேல், சுப்ரமணியன், ஜெகதீஷ்வரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி அரசு சுற்றுச்சூழல் துறை சார்பில் வில்லியனூர் தொகுதியில் மரக்கன்று நடும் விழா

எதிர்க்கட்சித் தலைவர் சிவா தொடக்கி வைத்தார்

புதுச்சேரி, நவ. 22-

புதுச்சேரி அரசு அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை சார்பில் புதுச்சேரி மாசு கட்டுப்பாடு குழுமம் பசுமை புதுச்சேரி இயக்கம் மூலம் வீட்டுக்கு ஒரு மரம், தாயின் பெயரில் ஒரு மரம் என்ற நிகழ்ச்சி வில்லியனூர் தொகுதி ஒதியம்பட்டில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இரா.சிவா அவர்கள் தலைமையில் தாய்மார்களுக்கு மரக்கன்றுகளை கொடுத்து தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அதிகாரிகள் ரமேஷ் ஜூனியர் இன்ஜினியர், பிரபு ப்ராஜெக்ட் கோ ஆர்டினேட்டர் மற்றும் பன்னீர்செல்வம், சாந்தலட்சுமி, தினேஷ், விமல் ராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள், தொகுதி செயலாளர் மணிகண்டன், தொகுதி துணை செயலாளர் ஜெகன் மோகன், ஹரி கிருஷ்ணன், திருவேங்கடம், நாராயணமூர்த்தி, பத்மநாபன், பற்குணன், பாலு, கோவிந்தராஜ், மூர்த்தி, மிலிட்டரி முருகன், கோவிந்தசாமி, மாரிமுத்து, ரவி, ஆனந்து, முரளி ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதல்வர் வருகையையொட்டி பாதுகாப்பு பணிகளை விழுப்புரம் ஆட்சியர் ஆய்வு

விழுப்புரம், நவ. 22-

விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை புரியும் முதலமைச்சர் வழுதரெட்டியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தினை திறந்துவைப்பதையொட்டி, மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு பணிகள் மற்றும் வாகனம் நிறுத்துமிட வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் பழனி ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்து, வழுதரெட்டியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தினை திறந்துவைப்பதையொட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு பணிகள் மற்றும் வாகனம் நிறுத்துமிட வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி நேரில் ஆய்வு செய்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு புரிந்து 28.11.2024 மற்றும் 29.11.2024 ஆகிய தேதிகளில் அரசு நிகழ்ச்சிகளான எல்லீஸ் அணைக்கட்டு முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமி நினைவு அரங்கம் இட ஒதுக்கீடு போராட்டத்தில் துப்பாக்கிச்சூட்டில் உயிர்நீத்த 21 சமூக நீதி போராளிகளின் தியாகத்தினை போற்றும் மணிமண்டபம் திறப்பு விழா மற்றும் பல்வேறு துறைகள் சார்பாக அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள்.

அதனடிப்படையில், இன்றைய தினம், வழுதரெட்டியில் புதியதாக கட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமி நினைவு அரங்கம், இட ஒதுக்கீடு போராட்டத்தில் துப்பாக்கிச்சூட்டில் உயிர்நீத்த 21 சமூக நீதி போராளிகளுக்கான மணிமண்டபத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு வசதிகள் குறித்தும், கண்டமானடி நெடுஞ்சாலை ஒட்டியுள்ள பகுதியில், வாகனம் நிறுத்துவதற்கான வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது மாவட்ட ஆட்சியர் பழனி தெரிவித்தார்.

ஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தீபக் சிவாச், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விக்னேஷ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அரசு மகளிர் பள்ளியில் காலை உணவு திட்ட உணவின் தரம் குறித்து ஆட்சியர் ஆய்வு

விழுப்புரம், நவ. 22-

விழுப்புரம் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்கீழ், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி நேரில் பார்வையிட்டு உணவினை சாப்பிட்டு, உணவின் தரம் குறித்து ஆய்வு செய்தார். உடன் விழுப்புரம் நகராட்சி ஆணையர் வீரமுத்துக்குமார் உட்பட பலர் உள்ளனர்.

சர்வதேச குழந்தைகள் தினத்தை முன்னிட்டு கையெழுத்து இயக்கம்

சேலம், நவ. 22-

சர்வதேச குழந்தைகள் தினத்தை முன்னிட்டு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், சேலம் மற்றும் தொன் போஸ்கோ அன்பு இல்லம் இணைந்து கையெழுத்து இயக்கம், செல்பி ஸ்டாண்ட் ஆகிய இரண்டு நிகழ்வுகள் சேலம் ரயில்வே ஜங்ஷனில் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ரயில்வே மேலாளர் செல்வராஜ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஸ்ரீமுரளி, குழந்தைகள் நலக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இளைஞர் நீதி குழும உறுப்பினர், பள்ளப்பட்டி காவல் ஆய்வாளர் நெப்போலியன், காவல் துறையினர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் பணியாளர்கள், குழந்தை உதவி மைய பணியாளர்கள், தொன் போஸ்கோ அன்பு இல்லத்தின் குழந்தை நேய சேலம் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு குழந்தைகள் பாதுகாப்பு சார்ந்த உறுதிமொழி எடுத்து கையெழுத்து இயக்கத்தில் கையொப்பமிட்டனர்.

கடையத்தில் பாரதியார் செல்லம்மாள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

கடையம், நவ. 22-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும் தமிழக சட்டப்பேரவை பொது கணக்கு குழு தலைவருமான செல்வப்பெருந்தகை கடையத்தில் மகாகவி பாரதியார் செல்லம்மாள் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்தார். கடையம் அரசு நூலகத்தை பார்வையிட்டு நூலகத்தின் புறவலர்களாக தன்னோடு சேர்த்து திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் மற்றும் நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன் ஆகியோர் தலா ரூபாய் 1000 நூலகரிடம் கொடுத்து தங்களை புரவலர்கள் ஆக இணைத்துக் கொண்டார்கள்.

கடையம் யூனியன் சேர்மன் செல்லம்மாள் மற்றும் கடையம் வட்டார மகளிர் காங்கிரஸ் தலைவி சீதாலட்சுமி ஆகியோருக்கு தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் சார்பாக இந்திரா பிரியதர்ஷினி விருது வழங்கினார்.

மகாகவி பாரதியார் செல்லம்மாள் ஆகியோரின் நினைவிடமாக விளங்கும் கடையத்தை சுற்றுலா தலமாக மாற்ற சுற்றுலாத்துறையிடம் பரிந்துரை செய்வதாகவும் தெரிவித்தார். கனிமவளத் துறையிடமிருந்து நிதி பெற்று கடையம் ராம நதி அணை செல்லும் சாலை சீரமைக்க பரிந்துரைக்கப்படும் என்று தெரிவித்தார்.

கடையம் செயல்படாத பழைய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது ஒரு கட்டிடத்தில் மட்டும் மாற்றுத்திறனாளிகள் சிறப்பு மருத்துவமனை அமைக்க பரிந்துரை செய்த பொது கணக்கு குழு தலைவருக்கு நன்றி தெரிவிக்கும்போது மீதமுள்ள இரண்டு கட்டிடங்களும் மீண்டும் மக்கள் மற்றும் அரசு பயன்பாட்டிற்கு நிச்சயம் கொண்டு வரப்படும் என்றார்.

தினமும்
மாலையில்
மாலை
எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

தங்கச்சிமடம், மண்டபம் பகுதிகளில் மருத்துவ முகாம்

ராமநாதபுரம், நவ. 22-

மண்டபம் வட்டாரத்திற்குட்பட்ட பாம்பன் தங்கச்சிமடம் மண்டபம் ஆகிய பகுதிகளில் மேக வெடிப்பு ஏற்பட்டு தமிழகத்திலேயே அதிக மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவின்பேரில் மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் அர்ஜுன் குமார் வழிகாட்டுதல் படி மண்டபம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் உள்ளாட்சி துறையுடன் இணைந்து காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கு நோய்கள் ஏற்படா வண்ணம் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாம்பன் மற்றும் மண்டபம் கிராமங்களில் மழைநீரால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 95 பயணாளிகளில் யாரும் தொற்று நோய் பாதிக்கப்பட்டுள்ளனரா என கண்டறிய இரண்டு நடமாடும் மருத்துவ குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் நோய் தொற்று ஏற்படாவண்ணம் அனைத்து பகுதிகளிலும் குளோரினேசன் பண்ணப்பட்ட பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுகிறதா என சுகாதார ஆய்வாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மழைக்காலத்தால் பாதுகாப்பாக கொதிக்க வைத்து பருகுமாறும், காய்ச்சல் அல்லது வயிற்று போக்கு இருந்தால் உடனடியாக அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அணுகுமாறும், கர்ப்பிணிகள் எதிர்பார்க்கும் பிரசவ நாள்களுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே பாதுகாப்பாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் JSSK வாகனங்கள் மூலமாக பிரசவத்திற்கு வரும்படி மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் அர்ஜுன் குமார் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்..

மண்டபம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் சுரேந்திரன் கூறுகையில், நடமாடும் மருத்துவ குழு தங்கள் பகுதிக்கு வரும்போது பொதுமக்கள் பயன் படுத்தி கொள்ளவும், அருகில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் சிகிச்சை மேற்கொள்ளவும் பொது மக்களை கேட்டுக் கொண்டார்.

மண்ணாடிப்பட்டு தொகுதி ஆதிதிராவிட மக்களுக்கு இலவச மனைப்பட்டா அமைச்சர் நமச்சிவாயம் கள ஆய்வு

புதுச்சேரி, நவ. 22-

சந்தை புதுக் குப்பம், தேத்தாம் பாக்கத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்குவது தொடர்பாக அமைச்சர் நமச்சிவாயம் அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

மண்ணாடிப் பட்டு தொகுதி, சந்தை புதுக் குப்பம் தேத்தாம்பாக்கம் கிராம ஆதிதிராவிடர் மக்கள் இலவச மனைப் பட்டா வழங்க கோரிக்கை விடுத்தனர். இதனை அடுத்து, அக்கிராமங்களில் இலவச மனைப்பட்டா வழங்குவதற்கான இடங்களை தேர்வு செய்ய அமைச்சர் நமச்சிவாயம் நேற்று அதிகாரிகளுடன் சென்று ஆய்வு செய்தார். பின்னர், பொதுமக்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, தேத்தாம் பாக்கத்தில் சேதமடைந்துள்ள அரசு பள்ளி கட்டடத்தை பார்வையிட்ட அவர், உடனடியாக இடித்து அகற்றி விட்டு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ., அருள்முருகன், வில்லியனூர் சப் கலெக்டர் சோமசேகர் அப்பாராவ் கொட்டாரு, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் இளங்கோவன், மண்ணாடிப்பட்டு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் எழில் ராஜன் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கல்

ராமநாதபுரம், நவ. 22-

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் கனமழையால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ராமேஸ்வரம் அடுத்த மண்டபத்தில் மழையால் வீடுகளை இழந்த பொதுமக்கள் மண்டபம் பேரூராட்சியில் பகுதியில் உள்ள பல்நோக்கு புகழிட கட்டிடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை சந்தித்த ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அவர்களுக்கு தேவையான போர்வை, மளிகை பொருட்கள் போன்றவற்றை வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்தராஜு, மண்டபம் பேரூராட்சி சேர்மன் ராஜா, செயல் அலுவலர் மாலதி மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இலவச மருத்துவ முகாம்

வேலூர், நவ. 22-

வேலூர் மாவட்டம் அணைக்கட்டு அடுத்த கரடிகுடி ஊராட்சியில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் மற்றும் SIH -- R & LC கரிகிரி மருத்துவமனை இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் கரடிகுடி ஊராட்சி மன்ற தலைவர் சி .கிரிதரன் தலைமையில் நடைபெற்றது.

முகாமில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட பெருந் தலைவர் திட்ட குழு தலைவர் மேற்கு ஒன்றிய செயலாளர் மு.பாபு முகாமை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

உடன் மத்திய ஒன்றிய செயலாளர் வெங்கடேசன் கிழக்கு ஒன்றிய செயலாளர் குமரபாண்டியன் அணைக்கட்டு ஒன்றிய சேர்மேன் பாஸ்கரன், மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணமேனன் ஒன்றிய குழு உறுப்பினர் குமார். மற்றும் ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் ராமஜெயம், பரிதா, உசேன், கலையரசி, சரவணன், விக்னேஷ், விவேக், நந்தினி, மோகன், சுமித்ரா, செந்தில், சதீஷ்குமார் கலந்துகொண்டனர்.

இலவச மருத்துவ முகாமில் கண் பரிசோதனை பல் பரிசோதனை மற்றும் தோல் பரிசோதனை பொது மருத்துவம் நடைபெற்றது .இதில் கண் அறுவை சிகிச்சை தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு உடனே மருத்துவமனை அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கப்பட்டு முற்றிலும் இலவசமாக நடைபெறுகிறதுகண்கண்னாடி இலவசமாக வழங்கப்படுகிறது கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு தங்குமிடம் உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

கரடிகுடி சுற்று பகுதியில் உள்ள பொதுமக்கள் 300க்கும் மேற்பட்டோர் பரிசோதனையில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முகாமில் கரடிகுடிஊராட்சி மன்ற துணைத் தலைவர் பாலா பாலாஜி நன்றியுரை கூறினார்.

ஏழை பெண்களுக்காக ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தை கொண்டு வந்த முதல்வர்

தென்காசி மாவட்ட பயனாளிகள் புகழாரம்

தென்காசி, நவ. 22-

நம் தாய் திருநாடாம் தமிழக மண்ணில் பிறந்தது முதல் ஆறு வயது வரை உள்ள ஒவ்வொரு குழந்தையின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தி அனைவரும் சரியான ஊட்டச்சத்து நிலையில் உள்ளனர் என்பதை உறுதி செய்து ஊட்டச்சத்தை குறைபாடு இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம்.

1975 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் 106வது பிறந்தநாளில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் பேரில் 33 வட்டாரங்கள் முதன்முறையாக தொடங்கப்பட்டது தமிழகத்தில் சென்னை (நகர்ப்புறம்). நிலக்கோட்டை (கிராமப்புறம்) மற்றும் தளி (பழங்குடி) ஆகிய மூன்று வட்டாரங்களில் முன்மாதிரி திட்டமாக தொடங்கப்பட்டு தற்போது தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத தமிழ்நாடு என்ற இலக்கை எட்டுவதே நமது மாநிலத்தின் கொள்கையாகும்.

தமிழ்நாட்டினை ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கம், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகளுக்கு (3 வயதுக்கு மேல்) குழந்தைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்துவதன் மூலம், வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு ஊட்டச்சத்தினை உறுதிப்படுத்துதல், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான உடல், அறிவாற்றல் மொழி, மன எழுச்சி, சமூக, மற்றும் உணர்ச்சி வளர்ச்சியை வளர்ப்பது மற்றும் 3 வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு அதிக கவனம் செலுத்துதல் குழந்தை பருவ பராமரிப்பு, வளாச்சி மற்றும் கற்றல், தாய் மற்றும் வயதுவந்தோர் பாதுகாப்பு உட்பட உகந்த ஊக்குவிப்பு வழங்குதல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பிறந்தது முதல் 6 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பால் மட்டுமே உணவாக வழங்கப்பட வேண்டும். ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் தாய்மார்களின் உடல்நலம் பேணினால் மட்டுமே, குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த முடியும். எனவே தான், தற்போது 76 ஆயிரத்து 705 ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ள பிறந்தது முதல் 6 மாதம் வரையிலான குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை அவர்களின் வீட்டிற்கே சென்று வழங்குவதோடு மட்டுமல்லாமல், குழந்தைகளின் நிலையை தொடர்ந்து கண்காணிக்கும் திட்டமாக உள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் மூலம் எடை குறைவான குழந்தைகள் மற்றும் மிதமான எடை குறைவுள்ள குழந்தைகளுக்கு முதல் கட்டமாக ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம் 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் மூலம் 77.3 சதவீத குழந்தைகள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளனர்.

ஊட்டச்சத்தினை உறுதி செய் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தினை 15.11.2024 அன்று முதலமைச்சர் அரியலூர் மாவட்டத்தில் உள்ள வாரணவாசி குழந்தைகள் மையத்தில் வைத்து துவங்கி வைத்தார்கள். இது வரை தென்காசி மாவட்டத்தில் உள்ள எடை குறைவாக உள்ள 1302 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

ஊட்டச்சத்தினை உறுதி செய் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற தாய்மார்கள் தென்காசி மோனிஷா, என் பெயர் மோனிஷா. என் கணவருடைய பெயர் ராஜன். என் குழந்தையின் பெயர் இதழினி. நாங்கள் மேல பாறையடித்தெருவில் வசித்து வருகிறோம். எங்கள் குடும்பம் மிகவும் பின்தங்கிய குடும்பம். என்னுடைய கணவர் கூலி வேலை செய்து வருகிறார்.

எனக்கு குழந்தை பிறக்கும்போது எடை குறைவாகப் பிறந்தது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் மூலம் எனக்கு இணை உணவு கொடுக்கிறார்கள். இதனை நான் கொழுக்கட்டையாகவும் உருண்டையாகவும் பாயாசமாகவும் செய்து சாப்பிட்டு வருகிறேன். இதனால் என்னுடைய எடையும் அதிகரித்துள்ளது. என் குழந்தையின் எடையும் ஒவ்வொரு மாதமும் எடை அதிகரித்து வருகிறது. தற்போது எனக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இதனால் எனக்கும் என் குழந்தைக்கும் எடை அதிகரித்துள்ளது. என் போன்ற ஏழைப் பெண்களுக்கு இத்திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமாக உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திய தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி என்றார்.

தென்காசி ராம் ஜோதிகா கூறும்போது, என் கணவரின் பெயர் ஆனந்த்ராஜ். என் குழந்தையின் பெயர் பேபி. நாங்கள் மேல பாறையடித்தெருவில் வசித்து வருகிறோம். எங்கள் குடும்பம் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள குடும்பம். என்னுடைய குழந்தை பிறக்கும் போது நானும் எடை குறைவாக இருந்தேன். என் குழந்தையும் எடை குறைவாகப் பிறந்தது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் மூலம் எனக்கு இணை உணவு கொடுக்கிறார்கள். இதனை நான் கொழுக்கட்டையாகவும், உருண்டையாகவும், பாயாசமாகவும் செய்து சாப்பிட்டு வருகிறேன். இதனால் என்னுடைய எடையும் அதிகரித்துள்ளது. என் குழந்தையின் எடையும் ஒவ்வொரு மாதமும் எடை அதிகரித்து வருகிறது. தற்போது எனக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது

எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. எனக்கு ஊட்டச்சத்து கிடைப்பதால் என் உடல் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது. என் குழந்தைக்கும் உடல் எடை அதிகரித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் முக.ஸ்டாலினுக்கு என்னுடைய நன்றியை மனதார தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளியீடு:
சண்முகசுந்தரம்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
ராமசுப்பிரமணியன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தென்காசி மாவட்டம்.

அதிமுக ஆய்வு கூட்டங்களில் நிர்வாகிகள் இடையே மோதல்: கைகலப்பு

நெல்லை, நவ. 22-

அதிமுகவில் கிளை, வார்டு, வட்டக் கழகங்கள் மற்றும் சார்பு அமைப்புகளின் பணிகள், செயல்பாடுகள் குறித்து நேரடியாக கள ஆய்வு செய்ய `கள ஆய்வுக் குழு’ ஒன்றை கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடந்த வாரம் நியமித்தார்.

இக்குழுவில், கே.பி.முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், திண்டுக்கல் சீனிவாசன், எஸ்.பி.வேலுமணி, பி.தங்கமணி, டி. ஜெயக்குமார், சி.வி.சண்முகம், செ. செம்மலை, அ.அருணாசலம், பா.வளர்மதி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இதையடுத்து கடந்த 11ம் தேதி இக்குழு கூட்டம் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து அவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களுக்குச் சென்று கள ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், நெல்லை, கும்பகோணத்தில் நடைபெற்ற அதிமுக கள ஆய்வுக் கூட்டங்களில் நிர்வாகிகளிடையே மோதல் வெடித்தது. நெல்லையில், முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் நடைபெற்ற கள ஆய்வு கூட்டத்தில் கொள்கை பரப்புச் செயலாளர் பாப்புலர் முத்தையாவுடன் மாவட்ட செயலாளர் கணேச ராஜா தரப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியது. இதையடுத்து எஸ்.பி.வேலுமணி மற்றும் மூத்த நிர்வாகிகள், மோதலில் ஈடுபட்டவர்களை சமாதானம் செய்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

அதைபோல தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் நடைபெற்ற அதிமுக கள ஆய்வு கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பேச எழுந்தபோது அவரை இடைமறித்து நிர்வாகிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் மேடையில் இருந்தவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து அவர்களை திண்டுக்கல் சீனிவாசன் சமாதானம் செய்தார்.

ரோடு வசதி கேட்டு அமைச்சரிடம் மனு

ஈரோடு பெரியசேமூர் பகுதியை சேர்ந்த டாடா நகர் பகுதி மக்கள் வீட்டு வசதித்துறை அமைச்சரை நேரில் சந்தித்து சாக்கடை வசதி, ரோடு வசதி கேட்டு மனு கொடுத்தனர். தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

சத்தீஷ்கரில் என்கவுன்டர்: நக்சலைட்டுகள் 10 பேர் சுட்டுக்கொலை

சுக்மா, நவ. 22-

இந்தியாவில் நக்சலைட்டுகள் ஆதிக்கம் மிகுந்த மாநிலங்களில் ஒன்றாக சத்தீஷ்கர் உள்ளது. இம்மாநிலத்தில், நக்சலைட்டுகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் சிறப்பு அதிரடிப்படை வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறார்கள். நக்சலைட்டுகளுக்கு எதிரான இந்த தேடுதல் நடவடிக்கையின் போது அவ்வப்போது பாதுகாப்பு படையினருக்கும் நக்சலைட்டுகளுக்கும் இடையே என்கவுன்டர் நடைபெறுகிறது.

அந்த வகையில், சத்தீஷ்கரின் சுக்மா மாவட்டத்தில் உள்ள கோண்டா மற்றும் கிஷ்த்ரம் பகுதி அருகே நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, அந்த இடத்தை சுற்றி வளைத்து தீவிர தேடுதல் வேட்டையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டனர். அப்போது, அங்கு நக்சலைட்டுகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை ஏற்பட்டது.

இந்த மோதலில் நக்சலைட்டுகள் 10 பேர் கொல்லப்பட்டனர். சுட்டுக்கொல்லப்பட்ட 10 நக்சலைட்டுகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது. பலியான நக்சலைட்டுகள் வசம் இருந்து ஏகே 47 உள்ளிட்ட துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் வேட்டையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 207 நக்சலைட்டுகள் உடல்கள் மீட்கப்பட்டு இருப்பதாக போலீசார் தெரிவித்தனர்.

மத்தூர் அரசு விடுதியில் ஆட்சியர் ஆய்வு

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், மத்தூர் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியில், “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்ட கள ஆய்வில், மாணவர்களின் பாடதிட்டங்கள் மற்றும் விடுதியில் அடிப்படை வதிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்

திருநெல்வேலி வட்டம், சீதபற்பநல்லூர் ஊராட்சி, சமத்துவபுரம் சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கார்த்திகேயன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007

ரூ.330 கோடி மதிப்பில் புதிய டைடல் பூங்கா திறப்பு

நாளை உருவாகும் காற்றழுத்த தாழ்வுப்பகுதி தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு

எடப்பாடி அணி கூட்டத்தில் மோதல்–கைகலப்பு

த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் தேர்வு பணி தீவிரம்

மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 22-11-2024 வெள்ளிக்கிழமை •வெளியூர்: 23-11-2024 சனிக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்